# முழு ஆண்டுத் தேர்வு

## மகிழ்ச்சி - ஐந்தாம் வகுப்பு

மதிப்பெண்கள் : 50 காலம் : 2½ மணி

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **5 x 1 = 5**

1. தமிழ் மாதங்களில் ஒன்று ____________.

அ. அணி ஆ. ஆனி இ. ஆணி ஈ. ஆநி

2. இரு வேறு சொற்கள் இணைந்து வருவது ____________.

அ. இணைப்புச் சொற்கள் ஆ. இணைச் சொற்கள்

இ. வினைச்சொற்கள் ஈ. பெயர்ச்சொற்கள்

3. இணைச் சொற்கள் ____________ வகைப்படும்.

அ. மூன்று ஆ. ஐந்து இ. ஏழு ஈ. எட்டு

4. உலகின் முதல் செயற்கைக்கோள் ____________.

அ. ஸ்புட்னிக் 2 ஆ. ஸ்புட்னிக் 1

இ. ஜிசாட் ஈ. ஜிசாட் – 3

5. இஸ்ரோ தொடங்கப்பட்ட ஆண்டு ____________.

அ. 1971 ஆ. 1969 இ. 1970 ஈ. 1972

**II. பொருள் எழுதுக.** **5 x 1 = 5**

1. ஆக்கம் – ________________
2. சீர்மை – ________________
3. கதம் – ________________
4. இசை – ________________
5. இன்னாமை – ________________

**III. பிரித்து எழுதுக.** **5 x 1 = 5**

1. அறிவறிந்து – ________________

2. ஐந்தடக்கல் – ________

3. விழிப்புணர்வு – ________

4. குடற்புண் – ________

5. நினைவாற்றல் – ________

**IV. எதிர்ச்சொல் எழுதுக.** **5 x 1 = 5**

1. கூடி x ________
2. கவலை x ________
3. ஏழை x ________
4. இருள் x ________
5. பெரிது x ________

**V. பொருத்துக.** **5 x 1 = 5**

| | |
|---|---|
| 1. ஒளி | இந்திய வானியலாளர் |
| 2. இறை | இருப்பிடம் |
| 3. ஆரியபட்டா | வெளிச்சம் |
| 4. ஜி.பி.எஸ் | கல்வி |
| 5. எடுசாட் | அரசன் |

**VI. சிறுவினாக்கள்: (எவையேனும் ஐந்திற்கு மட்டும் விடையளிக்கவும்)** **5 x 2 = 10**

1. ல, ழ, ள பொருள் வேறுபாட்டை எழுதுக.
2. ராமன் வசித்து வந்த கிராமத்தின் பெயர் என்ன?
3. நாமக்கல் கவிஞரின் சிறப்புப் பெயர் என்ன?
4. "மலையினும் மாணப் பெரிது" எது?
5. கீரையின் பயன்களை எழுதுக.
6. இணைச் சொல் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.
7. இவ்வுலகில் நிலைத்து வாழ என்ன செய்ய வேண்டும்?
8. பூனை கண்ணாடியில் எதைக் கண்டது?
9. இந்திய விண்வெளி ஆய்வின் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?
10. கீழ்வரும் விலங்குகளின் இளமைப் பெயர்களை எழுதுக.

அ) யானை –

ஆ) ஆடு –

இ) மான் –

ஈ) குதிரை –

**VII. பெருவினாக்கள்: (எவையேனும் இரண்டிற்கு மட்டும் விடையளிக்கவும்)** **2 x 5 = 10**

1. "அடக்கம் அமரருள்" மற்றும் "செறிவறிந்து சீர்மை" எனத் தொடங்கும் குறள்களை அடி பிறழாமல் எழுதுக.
2. பயிர்களின் வகைகள் மற்றும் அவற்றின் பயன்கள் பற்றி எழுதுக.
3. "இன்னாமை வேண்டின்" எனத் தொடங்கும் நான்மணிக்கடிகை பாடலை எழுதுக.
4. இந்திய விண்வெளி ஆய்வு மையம் – குறிப்பு வரைக.

**VIII. கட்டுரைப் போட்டியில் பரிசு பெற்ற உனது தோழிக்கு பாராட்டுக் கடிதம் எழுதுக.** **1 x 5 = 5**